1990 ஏப்ரல் 20] [திரு. ஆ. பாலையா]

தங்களுடைய பதிலிலே கூறுகிறபோது குழித்துறையார் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அந்தக் கிராமப் பகுதி சேர்ந்திருக்கிற காரணத்தால் அங்கு மிக விரைவில் குடிநீர் வழங்கப்படும் என்ற விவரத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியில் இதுவரையிலும் குழித்துறையார் குடிநீர் திட்டத்தினுடைய பணிகள் தொடங்கப்படவே இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? மேலும் அந்தப் பகுதியிலே இப்போது மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தை உடனடியாகத் தீர்த்திட அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்க போகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத் துறையிலே நடைபெற்ற கூட்டத்திலும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி அங்கேயும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் இப்போது துரிதப்படுத்தப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் அவர்கள் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார். அங்கே எந்தவிதமான நீர் ஆதாரங்களும் இல்லாத காரணத்தினாலே தான் முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல லாரிகளின் மூலம், மற்றவைகளின் மூலம் வறட்சி அதிகமாக இருக்கின்ற காலங்களில் குடிநீர் கொடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10-15 மணி

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்கு குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக்குழு.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இந்த பேரவைக்கு அளிக்கிறேன்.